


வேலூர் மாவட்டம் காட்பாடி சித்தூர் பஸ்நிலையத்தில் உள்ள திருமண மண்டபத்தில் நடந்த காட்பாடி சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் ஆலோசனை கூட்டத்தில் கழக பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் உரையாற்றினார். அருகில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், பகுதி செயலாளர்கள் பி.வன்னியராஜா, எம் சுனில்குமார், தொகுதி பொறுப்பாளர் குறிஞ்சி சிவா, ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.சரவணன், பரமசிவம், சி.ரவி, கே.கருணாகரன், எஸ்.தணிகாசலம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**பெரியார் - மலைப் பாறை !**
அந்த மலையைக் குடைந்து
செதுக்கப்பட்ட
மாமல்லபுரத்துச்
சிற்பம் அண்ணா !
நாமெல்லாம்
அந்தச்
சிற்பத்தின்
மாதிரி வடிவங்கள்.



....கலைஞர்......

## 750 பேர் பங்கேற்கின்ற ‘சாம்பியன்ஷிப்’ போட்டியானது

# தமிழ்நாட்டின் ‘சைக்கிளிங்’ வரலாற்றில் ஒரு மைல் கல்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**செங்கல்பட்டு, நவ. 17-**

**“750 பேர் பங்கேற்கின்ற ‘சாம்பியன்ஷிப்’ போட்டியானது தமிழ்நாட்டின் ‘சைக்கிளிங்’ வரலாற்றில் ஒரு மைல் கல்” என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 76-ஆவது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டியை தொடங்கி வைத்து உரையாற்றும்போது பெருமிதத்துடன் கூறினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.11.2024) செங்கல்பட்டு மாவட்டம், மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள சைக்கிளிங் ஓடுதளத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்திய சைக்கிளிங் கூட்டமைப்பு ஒன்றிணைந்து நடத்தும் 76-வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டியை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:-

நமது முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையானது தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை தமிழகத்தில் தொடர்ச்சியாக நடத்தி வருகிறது. பல தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நம்முடைய திராவிட மாடல் அரசு முதன் முறையாக நடத்திக் காட்டி இருக்கிறது. இதன் அடுத்த கட்டமாக, 76 வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டியை முதன்முறையாக இன்றைக்கு தமிழ்நாட்டில் இன்று நடத்தியிருக்கின்றோம்.

**அனைவருக்கும் பெருமை!**

சென்னையில் நடைபெறும் முதல் தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டியினை காண வந்துள்ள அனைவருக்கும் மிகவும் அன்பான வரவேற்பினை தெரிவித்துக்கொள்கிறேன். இது நம் அனைவருக்கும் இது ஒரு பெருமையான தருணமாகும்.

விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் அதிகாரிகள் உட்பட கிட்டத்தட்ட 750 பங்கேற்பாளர்கள் கொண்ட இந்த சாம்பியன்ஷிப், போட்டியானது தமிழ்நாட்டின் சைக்கிளிங் வரலாற்றில் ஒரு மைல் கல் நிகழ்வாகும். முதன்முறையாக ரூ.75 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு இந்த மாபெரும் நிகழ்வை நடத்துகிறது, மேலும் இந்த போட்டி சீனியர், ஜூனியர் மற்றும் சப்-ஜூனியர் பிரிவுகளில் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் சைக்கிளிங் வளர்ச்சிக்கு இந்த போட்டி ஒரு சான்றாகும், மேலும் இந்த விளையாட்டின் எதிர்காலம் மிகவும் பிரகாசமாக உள்ளது இந்த நிகழ்ச்சியின் மூலம் அனைவருக்கும் தெரியவரும்.

இந்த மதிப்புமிக்க நிகழ்ச்சி நடைபெறும் SDAT சைக்கிள் ஓட்டுதல் Velodrome, உண்மையிலேயே ஒரு நவீன வசதியாகும். 333.333 மீட்டர்கள் கொண்ட இந்த சைக்கிளிங் டிராக், நாட்டின் மிக முன்னோடியான, உலகத் தரம் வாய்ந்த சைக்கிள் டிராக் (ஓட்டுதல் தடங்களில்) ஒன்றாகும். நமது திராவிட மாடல் அரசாங்கத்தின் இடைவிடாத முயற்சியால் சமீபத்தில் ரூ.1 கோடியில் புதுப்பிக்கப்பட்ட இந்த மைதானம், தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளை நடத்தும் வகையில் முழுமையாக செயல்படுவதை உறுதி செய்துள்ளது.

**முன்னோடி முயற்சியாகும்!**

மேலும் சைக்கிளிங் விளையாட்டின் வளர்ச்சிக்கான நமது அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் சில முக்கிய சிறப்பம்சங்களைப் பகிர்ந்து கொள்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன். தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையானது, எங்களது சைக்கிள் ஓட்டும் விளையாட்டு வீரர்களின் நிதி மற்றும் உபகரணத் தேவைகளுக்கு உதவுவதற்கான முன்னோடி முயற்சியாகும். இந்த அறக்கட்டளையின் மூலம், தகுதியான விளையாட்டு வீரர்களுக்கு 11க்கும் மேற்பட்ட உயர்தர அதிநவீன பந்தய சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன, கடந்த காலத்தில் சைக்கிள்களுக்காக ஒதுக்கப்பட்ட சுமார் ரூ.1 கோடியே 67 லட்சம் நிதியுதவியுடன் அவர்களில் 11 பேர் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கம் வென்றுள்ளனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.



இந்த அறக்கட்டளையின் முதல் பயனாளி சைக்கிளிங் வீராங்கனை செல்வி.தபிதாவிற்கு அவரது சைக்கிளிங் திறமை மற்றும் பயிற்சியை மேம்படுத்த ரூ.14 லட்சம் மதிப்புள்ள அதிநவீன பந்தய சைக்கிள் வழங்கப்பட்டது. மேலும், எங்களது சைக்கிளிங் பயனாளிகள் அனைவரும் இந்த தேசிய சாம்பியன்ஷிப்பில் தீவிரமாக பங்கேற்கிறார்கள். சைக்கிளிங் விளையாட்டில் புதிய மைல்கற்களை அமைப்பதில் தமிழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது.

2024-25 தமிழ்நாட்டின் பட்ஜெட்டில், BMX சைக்கிளிங் டிராக்கை நிறுவுவதாக முதலமைச்சர் அவர்களின் அரசு அறிவித்தது, இது இந்தியாவிலேயே முதன்முறையாக ரூ.12 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட உள்ளது. இது தமிழ்நாட்டின் சைக்கிளிங்க்கு ஒரு புதிய பரிமாணமாக இருக்கும். விளையாட்டு பல்கலைக்கழக வளாகத்தினுள் சைக்கிள் ஓட்டுதலுக்கான சிறப்பு மையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது, இது அடிமட்ட அளவில் நமது சைக்கிளிங் விளையாட்டு வீரர்களை மேம்படுத்துவதில் நீண்ட தூரம் கொண்டு செல்லும்.

தமிழ்நாட்டில் கேலோ இந்தியா யூத் கேம்ஸ் 2023 நடத்தப்பட்டபோது சைக்கிளிங் போட்டிகளும் நடத்தப்பட்டன, தமிழ்நாட்டின் சைக்கிளிங் வீரர்கள் சைக்கிள் ஓட்டுதலில் ஒட்டுமொத்த சாம்பியனாக உருவெடுத்தார்கள். கேலோ இந்தியா யூத் கேம்ஸ் 2023 இல், தமிழ்நாடு சைக்கிளிங் வீரர்கள் 5 தங்கம், 1 வெள்ளி மற்றும் 6 வெண்கலப் பதக்கங்களை வென்றனர். ஒட்டுமொத்த பதக்கப் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தைப் பெறுவதற்கு இது குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்துள்ளது. குறிப்பாக பெண்கள் பிரிவு மிகவும் வலுவாக இருந்தது, இந்த பிரிவில் தமிழ்நாடு ஒட்டுமொத்த சாம்பியன்களாக உருவெடுத்தது.

**முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வை!**

நமது விளையாட்டு வீராங்கனைகள் ஸ்ரீமதி, தமிழரசி, தன்யதா, பூஜா ஸ்வேதா, கிஷோர், புருசோத்தமன், மைக்கேல் ஆண்டனி, நிதின் ஆகியோர் தொடர்ந்து நம்மைப் பெருமைப்படுத்துகிறார்கள். நமது முதலமைச்சரின் தொலைநோக்கு பார்வையும் உறுதியான ஆதரவும் இல்லாவிட்டால் விளையாட்டில் இந்த அபரிமிதமான வளர்ச்சி சாத்தியமில்லை. மேலும், எங்கள் பயிற்சியாளர்கள் மற்றும் அதிகாரிகளின் அயராத முயற்சிக்கு இந்த தருணத்தில் நான் நன்றியை தெரிவிக்கின்றேன்.

தேசிய சாம்பியன்ஷிப் போட்டிகளில் சாலை, தடம் மற்றும் மவுண்டன் பைக் (MTB) நிகழ்வுகள் உட்பட பல்வேறு சைக்கிள் ஓட்டுதல் நிகழ்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ரூ.63 லட்சம் மதிப்புள்ள உயர் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கூடுதலாக, சிஎம் டிராபி விளையாட்டு போட்டிகள் 2024 போன்ற பல நிகழ்வுகளுடன் சைக்கிள் ஓட்டுதல் (சைக்கிளிங்) ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது, மேலும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் HCL சைக்ளோதான் போன்ற முக்கிய நிகழ்வுகளை நாங்கள் நடத்தியுள்ளோம், ஆண்டுதோறும் SDAT ஆல் ஏற்பாடு செய்யப்படும் பேரறிஞர் அண்ணா சைக்கிள் பந்தயம் நடத்தப்பட்டு வருகின்றது.

**விளையாட்டு வீரர்களின் திறமைக்கு எடுத்துக்காட்டு!**

இந்த முயற்சிகள் அனைத்தும் தமிழகத்தில் சைக்கிள் ஓட்டுதலை ஒருமுக்கிய விளையாட்டாக மாற்ற பங்களிக்கின்றன. தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் தமிழகத்தின் சைக்கிள் ஓட்டுநர்களின் மகத்தான சாதனைகளை நான் பாராட்ட விரும்புகிறேன். இந்த அபாரமான நிகழ்ச்சிகள், தமிழக விளையாட்டு வீரர்களின் திறமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்த சாம்பியன்ஷிப் போட்டியை தொடங்கும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாநிலத்தை இந்த விளையாட்டில் சிறந்த மையமாக மாற்ற நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். சிறந்த விளையாட்டு வீரர்கள் வெற்றி பெறட்டும்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இப்போட்டி ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் யூத் (Youth): 12 - 14 வயதுக்கு உட்பட்டோர், சப்-ஜூனியர் (Sub-Junior): 15 - 16 வயதுக்கு உட்பட்டோர், ஜூனியர் (Junior): 17 - 18 வயதுக்கு உட்பட்டோர், எலைட் (Elite): 19 வயது மற்றும் மேற்பட்டவர் என தலா நான்கு உட்பிரிவுகளை கொண்டு நடத்தப்படுகிறது. இதில் ஆண்களுக்கான யூத் பிரிவில் 2 போட்டிகளும், சப்-ஜூனியர் பிரிவில் 4 போட்டிகளும், ஜூனியர் பிரிவில் 7 போட்டிகளும் மற்றும் எலைட் பிரிவில் 9 போட்டிகளும் நடைபெறும். பெண்களுக்கான யூத் பிரிவில் 2 போட்டிகளும், சப்-ஜூனியர் பிரிவில் 4 போட்டிகளும், ஜூனியர் பிரிவில் 7 போட்டிகளும் மற்றும் எலைட் பிரிவில் 8 போட்டிகளும் நடைபெறும்.

இப்போட்டியில் 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 700 சைக்கிள் பந்தய வீரர்கள் பங்கேற்கவுள்ளனர். இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 41 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கிறார்கள்.

இந்நிகழ்வில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் ஜெ.மேகநாதரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ் கூடுதல் ஆட்சியர் செல்வி அனாமிகா, இந்திய சைக்கிள் கூட்டமைப்பின் பொது செயலாளர் மணிந்தர் பால் சிங், உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் எம்.சுந்தர், தமிழ்நாடு சைக்கிளிங் சங்கத்தின் தலைவர் சுதாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்!

## முகாம்கள் தொடங்கியது!

*சென்னை, நவ. 17-*

*இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி, அடுத்தாண்டு ஜனவரி 1ம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப்பணிகள் கடந்த அக்.29ம் தேதி தொடங்கி மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது.*

*இதன் ஒருபகுதியாக வாக்காளர்கள் தங்கள் பெயரைச் சேர்ப்பதற்கும், வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வதற்கும் வசதியாக இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நேற்றும், இன்றும் மற்றும் 23, 24 ஆகிய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில், வாக்குச்சாவடி அமைவிடங்களில் சிறப்பு முகாம்கள் அறிவிக்கப்பட்டன.*

*மேலும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் உள்ளவர்கள் மற்றும் 01.01.2025 அன்று 18 வயது பூர்த்தி அடைபவர்கள் (01.01.2007 ஆம் தேதிக்கு முன்பாக பிறந்தவர்கள் மற்றும் 17 வயது நிரம்பி 18 வயது பூர்த்தி அடையும் நிலையில் உள்ளவர்களும்) படிவம்6 ஐ பூர்த்தி செய்தும், பெயர்கள் நீக்கம் தொடர்பாக படிவம்7 ஐ பூர்த்தி செய்தும், சட்டமன்ற தொகுதிக்குள்ளேயே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குடிபெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் உள்ளவர்களும்,*

*மேலும் வேறு தொகுதிக்கு குடிபெயர்ந்த வர்களும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க மற்றும் திருத்தங்கள் செய்ய படிவம்8 ஐ பூர்த்தி செய்தும் அதற்கான ஆவண ஆதார நகலினை இணைத்தும் சமர்ப்பித்து வருகிறார்கள்.*



சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஏ.வி.எம். அவென்யூ பகுதியில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாக்காளர் சேர்ப்பு, நீக்கல் திருத்தம், சரி பார்க்கும் பணியினை ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தொகுதி பார்வையாளர் வே.உமாகாந்த், பகுதிக் கழகச் செயலாளர் மு.ராசா, வட்டக் கழகச் செயலாளர்கள் மு.கோவிந்தராஜன், வீ.ஏ.ராஜா உள்ளிட்ட கழகத்தினர், பாக முகவர்கள் உடன் இருந்தனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலினின் மகத்தான வெற்றிப் பயணம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

அதன் தொடர்ச்சியாக, இரண்டாவது கட்டமாக 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரியலூர் மாவட்டம் திருமானூர் ஒன்றியம் வாரணவாசி அங்கன்வாடி மையத்தில் ஊட்டச்சத்தை உறுதிசெய் திட்டத்தின் 2ஆம் தொகுப்புத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். இந்தத் திட்டத்தில் தீவிர ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் என்று அடையாளம் காணப்பட்டுள்ள 76,075 தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்படுகின்றன. அந்த நிகழ்ச்சிக்குப் பெருந்திரளாக வருகைதந்த மகளிர் கூட்டம் முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் எங்கள் குழந்தைகளும் நாங்களும் நலம் பெறுவோம் என்று கூறி நெகிழ்ந்தது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. இதே நாளில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் தொடங்கி வைக்கப் பட்டுள்ளது.

**அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!**

அதனைத் தொடர்ந்து, அரியலூர் மாவட்டம் கொல்லாபுரத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்றது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அந்த விழாவில் 120 கோடி ரூபாய் மதிப்பிலான 53 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள். ரூ.88 கோடி மதிப்பீட்டிலான 507 முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்தார்கள். ரூ.170 கோடி மதிப்பில் 21 ஆயிரத்து 862 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சிகளில் எல்லாம் அரியலூர் - பெரம்பலூர் மாவட்டங்களின் மக்கள் எழுச்சியோடு பெருந்திரளாக வருகை தந்து முதலமைச்சர் அவர்களை வாழ்த்திப் பாராட்டினார்கள். அவர்கள் முகத்தில் கண்ட மகிழ்ச்சியைக் கவனித்த முதலமைச்சர் அவர்கள் பல அறிவிப்புகளை வெளியிட்டு உரையாற்றும் போது, “நான் பிரச்சினைகளை நேர்கொண்டு நிற்கிறேன். அந்தப் பிரச்சினையை தீர்க்கிறேன். மக்களுக்காகப் பார்த்துப் பார்த்துத் திட்டங்கள் தீட்டுகிறேன். திட்டங்கள் எப்படிச் செயல்படுகின்றன என்று கள ஆய்வு செய்கிறேன். சொன்னால் சொன்ன நாட்களுக்குள் திட்டங்களைத் திறந்து வைக்கிறேன். அதனால் தான், இந்த ஸ்டாலின் எங்கு சென்றாலும் மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள். எங்கள் குறைகளைப் போக்குவார் என்ற நம்பிக்கையோடு தேடிவந்து மனுக்களை கொடுக்கிறார்கள், அந்த நம்பிக்கையை எந்நாளும் காப்பாற்றுவேன் காப்பாற்றுவேன் என்று உறுதி தருகிறேன்”. என பெருமிதத்தோடு குறிப்பிட்டார்கள்.

முதலமைச்சர் அவர்கள் கூறியதைக் கேட்டதும் மக்கள் எழுப்பிய மகிழ்ச்சி ஆரவாரம் முதலமைச்சர் அவர்களின் மீது, மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்தது. அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் அரசின் வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

விழா ஏற்பாடுகளை எல்லாம் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் மிகச் சிறப்பாகச் செய்திருந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் அதைக் குறிப்பிட்டுப் பேசும் பொழுது, என்னால் வார்ப்பிக்கப்பட்ட அரியலூர் அரிமா அமைச்சர் சிவசங்கர் என்று பாராட்டினார். மொத்தத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஒருநாள் அரியலூர் - பெரம்பலூர் மாவட்டச் சுற்றுப் பயணம் அப்பகுதி மக்களிடையே மட்டுமல்ல, அம்மாவட்ட மக்களிடையே மட்டுமல்ல; தொலைக்காட்சிகள் வாயிலாக நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்த தமிழ்நாட்டு மக்கள் அனைவரிடத்திலும் இந்த அரசின் மீதும் முதலமைச்சர் அவர்கள் மீதும் மிகுந்த பெருமிதம்கொள்ளச் செய்த வெற்றிப் பயணமாக அமைந்தது என்றால் அது மிகையல்ல.